நகராட்சி அலுவலகம்
பொன்னேரி.

கூட்டம் எண். 06 / 2025 நாள்: 22.08.2025

# <u>சாதாரணக்கூட்டம்</u>

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத் தலைவர் டாக்டர் . திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் M.B.B.S., D.G.O அவர்களின் தலைமையில் 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29.08.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நடைபெறும் அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்கப்பட உள்ளதால் துணைத்தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத்தலைவர்
பொன்னேரி நகராட்சி

## <u>நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u>

**<u>பொருள் எண் 1</u>**

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் ஜுலை 2025 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** பதிவுசெய்யலாம்

நகர்மன்ற தீர்மான எண் 753 நாள் 29.08.2025

தீர்மானம் : ஆணையர் அவர்களின் ஜுலை 2025 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் .

**<u>பொருள் எண் 2</u>**

இந்நகராட்சியின் பொறியாளர் அவர்களின் ஜுலை 2025 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>** பதிவுசெய்யலாம்.

நகர்மன்ற தீர்மான எண் 754 நாள் 29.08.2025

தீர்மானம் : பொறியாளர் அவர்களின் ஜுலை 2025 மாத நாட்குறிப்பு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்கிறது.

<u>பொருள் எண் 3</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழை 2025-ன் போது தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரினை ஏற்கனவே உள்ள டீசல் மோட்டார்கள் மற்றும் மின்மோட்டார்கள் மூலம் வெளியேற்ற தேவையான குழாய்கள் , Starter , வெள்ளத்தடுப்பு பணிகளுக்கு தேவையான மணல் மூட்டைகள் , சவுக்கு கொம்புகள் போன்றவற்றினை தயார் நிலையில் வைத்துக்கொள்ள ஏதுவாக கொள்முதல் செய்யவும், அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. **மன்றம் அனுமதி வழங்கலாம்**.
2. **மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்** .

( **ந.க.எண்**. 864 /2024/**இ**1)

நகர்மன்ற தீர்மான எண் 755 நாள் 29.08.2025

தீர்மானம் : எதிர்வரும் வடகிழக்கு பருவமழை 2025-ன் எதிர்கொள்ளும் வகையில் உத்தேச செலவினம் ரூ3.00 இலட்சத்தினை மன்ற அனுமதிக்கு – மன்றம் அனுமதி வழங்குகிறது பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

<u>பொருள் எண் 4</u>

பொன்னேரி நகராட்சியில் எதிர்வரும் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள 5 எண்ணிக்கையிலான 5 HP திறன் கொண்ட ஆயில் என்ஜின்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய,அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.50,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. **மன்றம் அனுமதி வழங்கலாம்**.
2. **மேற்கண்ட செலவினம் நகராட்சி நிதியின் கீழ் செலவிட மன்றம் அனுமதி அளிக்கலாம்**.

( **ந.க.எண்**. 864/2024 **இ**1)

நகர்மன்ற தீர்மான எண் 756 நாள் 29.08.2025

தீர்மானம் : எதிர்வரும் பருவமழை முன்னெச்சரிக்கை 5 HP திறன் கொண்ட ஆயில் என்ஜின்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்ய தொகை ரூ.50,000/- க்கு **நகராட்சி நிதியின் கீழ் செலவிட** மன்றம் அனுமதிக்கு **அளிக்**கிறது.

**<u>பொருள் எண்</u>** <u>5</u>

**பொன்னேரி நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம்** ( Additional Turip ) 2025 - 2026 –**ன்கீழ்** 22 **சாலைகளுக்கு தார்தளம் அமைத்தல் பணி ரூ**. 82.50 **இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள** 18.07.2025 **அன்று** Online **மூலம் ஒப்பந்தபுள்ளி நடைபெற்றது. ஒப்பந்தபுள்ளி தொடர்பான விளம்பரம்** 15.07.2025 **தினமணி நாளிதழில் வெளியிடப்பட்டது. விளம்பரம் வெளியிட்ட வகையில் அதற்கான கட்டணம்** :**ரூ**. 16993 /- **வழங்குமாறு** Adwave Advertising , Chennai **நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்காணும் தொகை பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு**.

**அலுவலகக்குறிப்பு**

1. **மன்றம் அனுமதி வழங்கலாம்**.
2. **மேற்கண்ட செலவினம் நகராட்சி நிதியின்கீழ் செலவிட மன்றம் அனுமதி அளிக்கலாம்**.

( **ந.க.எண்**. 30/2025 **இ**1 )

நகர்மன்ற தீர்மான எண் 757 நாள் 29.08.2025

தீர்மானம் : 2025 - 2026 –ன்கீழ் சாலைகளுக்கு தார்தளம் அமைத்தல் பணி ரூ. 82.50 இலட்சம் பணி மேற்கொள்ள விளம்பரம் 15.07.2025 தினமணி நாளிதழில் வெளியிட்ட வகையில் ரூ. 16993/- பொதுநிதி**யின் கீழ் செலவிட** மன்றம் அனுமதி **அளிக்கிறது**.

**<u>பொருள் எண்</u>** <u>6</u>

பொன்னேரி நகராட்சி ஆணையர் அலுவலக பயன்பாட்டில் உள்ள Bolero வாகனம் TN 18 BK 4856 காப்பீட்டு முடிவடைவதால் 2025-26 – ம் ஆண்டிற்கான காப்பீட்டு தொகை ரூ34878/- செலுத்தக்கோரி United India Insurance, சென்னை நிறுவனம் மூலமாக பட்டியல் வரப்பெற்றுள்ளதால் மேற்காணும் தொகை செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) பொதுநிதியிலிருந்து செலுத்திட மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க. எ.ண் 654/2023/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 758 நாள் 29.08.2025

தீர்மானம் : Bolero - TN 18 BK 2025-26 – ம் ஆண்டிற்கான காப்பீட்டு தொகை ரூ34878/- செலுத்திட பொதுநிதியிலிருந்து நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.

**பொருள் எண் 7**

பொன்னேரி நகராட்சியில் வார்டு எண் 6 முதல் 27 வரையிலான பகுதிகளில் பாதாள சாக்கடை பணி நடைபெற்று முடியும் நிலையில் உள்ளது . தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் கழிநீரகற்று வாரியத்தின் மூலம் பணி முடிக்கப்பட்ட பகுதிகளில் பிரதான ஆள் இறங்கு கிணற்றிலிருந்து (Manhole ) குடியிருப்பின் மதிற்சுவர் வரை குழாய் பதிக்கப்பட்டுள்ளது. மதிச்சுவற்றிலிருந்து வீட்டில் உள்ள கழிவறை வரை இணைக்கும் பணி ( Internal Plumbing ) 7605 வீடுகளுக்கு இணைப்பு வழங்கும் பணிக்கான அரசாணை எண் ( MS) 109 நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( MA2) நாள் 16.08.2024 அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட திட்ட மதிப்பீடு ரூ.5.20 கோடியில் 50 % தொகை ரூ.2.60 கோடி CGF மானிய திட்டத்தில் 50 % தொகை ரூ.2.60 கோடியில் State Infrastructure Development Fund 2024-25-ல் ஆண்டு வட்டி 4 % ( சதவீதம் ) ( Interest Rate Per Annum 4% ) என்ற அடிப்படையில் 5 ஆண்டுகள் கடனாக பெற்று திட்டத்தை முடிக்க கீழ்க்கண்ட விவரங்கள் அடிப்படையில் பணி செய்ய இந்நகர் மன்ற தீர்மானம் எண் 535 நாள் 30.08.2024 ல் ஒப்புதல் வழங்கியுள்ளது.

( Amount in Crores )

| Sl.No | Name of the Project | Number of House Service Connection | Appraisal Project Cost | SUIDF Share (50 %) | CGF O & M Share 50 % |
|---|---|---|---|---|---|
| 1 | UGSS Internal Plumbing in Ponneri Municipality | 7605 | 5.20 | 2.60 | 2.60 |

மேற்கண்ட திட்டத்தில் SUIDF திட்டத்தில் வாங்கப்படும் தொகைக்கு Tripartite Escrow Agreement ஒப்பந்தம்செய்ய கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மன்ற ஒப்புதல் பெற மன்றத்தின் அனுமதிக்கு.

**COUNCIL RESOLUTION**

1. Resolved that the Ponneri Municipality is authorised to borrow a loan amount of **Rs.2.60 Crore** for " Provision of internal plumbing for Underground Sewerage Scheme - House service connections (7605 Nos)" from Tamil Nadu Urban Finance Infrastructure Development Corporation Ltd (TUFIDCO), under State Urban Infrastructure Development Fund (SUIDF), as per the terms and conditions prescribed by G.O.(Ms)No.109, MA&WS (MA2) Dept., dated 16-08-2024.

2. Resolved that the Ponneri Municipality is hereby authorised to execute the loan agreement and other documents, if any with TUFIDCO and complete all other formalities including affixing the common seal of the Ponneri Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of the Ponneri Municipality.

3. Resolved that the Ponneri Municipality bank account on the revenue collection such as property tax, professional tax and other revenue collections shall be escrowed / to the extent of quarterly / monthly repayment commitment in favour of TUFIDCO.

This exclusive escrowed account will be in existence till the time of clearing the loan and all other dues under this project to TUFIDCO.

4. Resolved that the Commissioner be and hereby authorized to make necessary budgetary provisions in the annual budget for the repayment of principal, interest and other monies due for the loan availed for this project proposal to TUFIDCO.
5. Resolved to agree, to adjust by the Government of Tamil Nadu from funds receivable for Ponneri Municipality such as Devolution grant payment under State Finance Commission recommendation, other grants, share on tax and stamp duties due from the Government, in the event of default in repayment of principal, interest and other monies due to TUFIDCO in respect of loans availed for this project.
6. The Ponneri Municipality shall submit an undertaking stating that if for any reason, the projected increase in property tax, professional tax etc., could not be implemented, the short fall if any arising in any period shall not affect the timely repayment of its dues to TUFIDCO and in such case the Government may be permitted to deduct the said dues out of the SFC funds on the first priority basis.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். 428 /2022/E1)

நகர்மன்ற தீர்மான எண் 759 நாள் 29.08.2025

தீர்மானம் : ( Internal Plumbing ) 7605 வீடுகளுக்கு இணைப்பு வழங்கும் பணிக்கு இந்நகர் மன்றம் தீர்மானம் எண் 535 நாள் 30.08.2024 ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. SUIDF திட்டத்தில் வாங்கப்படும் தொகைக்கு Tripartite Escrow Agreement ஒப்பந்தம் செய்ய COUNCIL RESOLUTION **க்கு** (six) நிபந்தனைகளுடன் மன்ற ஒப்புதலுக்கு - மன்றம் ஒப்புதல் அளிக்கிறது

**பொருள் எண் 8**

அரசாணை ( நிலை ) எண் 368 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நாள் 19.09.2025 மற்றும் அரசாணை ( நிலை ) எண் 97 நாள் 21.02.2025 ன்படி அரசு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி குடியிருந்து வரும் நபர்களுக்கு அவர்களது ஆக்கிரமிப்பினை வரன்முறைப்படுத்தி பட்டா வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இந்நேர்வில் கீழ்க்காணும் விவரப்படியான பொன்னேரி 2 கிராமம் புல எண் 322/2 ல் வசித்து வரும் 22 பயனாளிகளுக்கு பட்டா வழங்கும்பொருட்டு மாநில அளவிலான குழுவிற்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்க நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி அதன் நகலினை அனுப்ப திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதத்தில் (ந.க.எண்.3485832/2025/ஆ3 நாள்.20.06.2025) தெரிவிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ.எண் | கிராமம் | புல எண் | வகைப்பாடு | மொத்த பரப்பு | வரன்முறை ஆக்ரமண பரப்பு (ஹெ) | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1. | பொன்னேரி -2 | 322/2 | தோப்பு | 0.43.00 | 0.14.57 | 22 |

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண். 913 /2025/F1)

நகர்மன்ற தீர்மான எண் 760 நாள் 29.08.2025

தீர்மானம் : வருவாய் பேரிடர் மேலாண்மைத்துறை நாள் 19.09.2025 ன்படி பயனாளிகள் 22 நபர்களுக்கு பட்டா வழங்கும்பொருட்டு நகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி நகலினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் - மன்றம் அனுமதி அளிக்கிறது.

**பொருள் எண் 9**

பொன்னேரி நகராட்சியில் பொதுமக்களின் கோரிக்கைகளை அவர்களின் இருப்பிடத்திலேயே நிவர்த்தி செய்ய "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாம் 20.08.2025, 22.08.2025, 28.08.2025 , 30.08.2025 , 03.09.2025 , 09.09.2025 மற்றும் 11.09.2025 ஆகிய நாட்களில் நடைபெறவுள்ளதால் உரிய ஏற்பாடுகளை செய்யும் பொருட்டு, ஏற்கனவே நடந்த முடிந்த முகாம்களில் தயார் செய்யப்பட்ட பேனர்களை ப்ரேம், ரீப்பர்களை வாடகைக்கு எடுத்து கொண்டு முகாம்களில் அமைத்தல் பணி மற்றும் விளம்பரங்கள், ஆட்டோ அறிவிப்புகள், விழாவில் நகராட்சி சார்பாக வழங்கப்படும் விண்ணப்பம் படிவங்கள், அச்சிட்டு பெறுதல், எழுதுபொருட்கள் பேப்பர், இருப்பு பொருட்கள் வாங்கி வழங்குதல் மற்றும் வேறு துறைகளில் வரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு காலை டிபன் மற்றும மதிய உணவு வழங்குதல் , பொதுமக்களிடம் பெறப்படும் மனுக்களை கணினியில் பதிவேற்றம் செய்யவும், அதற்கான கணினிகள், லேப்டாப்கள், பிரிண்டர்கள் மற்றும் இணையதள வசதி ஏற்படுத்தி தருதல், வெவ்வேறு துறை அலுவலர்களுக்கும் கணினி உபகரணங்கள் சப்ளை மற்றும் பொது மக்கள் வசதிக்காக சாமியானா பந்தல், மேசைகள், நாற்காலிகள் சப்ளை செய்தல், முகாமிற்கு வரும் பொதுமக்கள் மற்றும் அலுவலர்களுக்கு குடிநீர் வசதி ஏற்பாடு செய்து தருதல் ஆகிய செலவினம் ஏழு முகாம்களுக்கு ஆகும் அதற்கான தோராய செலவினம் ரூ 14.00 இலட்சம் பொதுநிதியிலிருந்து செலவிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது

**அலுவலக குறிப்பு**

அரசு துறை சார்ந்த பணி என்பதால் பணியின் அவசியம் கருதி ஏற்கனவே 24.07.2025, 25.07.2025, 29.07.2025 மற்றும் 30.07.2025 அன்று நடைபெற்ற முகாம்களில் பல்வேறு பணிகளை செய்ய ஏற்கனவே குறைந்த விலைப்புள்ளி அளித்து பணிகளை செய்து நிறைவு செய்த நிறுவனமான M/s. Nainika Enterprises நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

( ந.க.எண். 864 /2025 / இ1)

நகர்மன்ற தீர்மான எண் 761 நாள் 29.08.2025

தீர்மானம் : உங்களுடன் ஸ்டாலின், ஏழு முகாம்களுக்கு ஆகும் தோராய செலவினம் ரூ 14.00 இலட்சம் பொதுநிதியிலிருந்து செலவிட M/s. Nainika Enterprises நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி - செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்குகிறது.

## பொருள் எண் 10

பொன்னேரி நகராட்சியில் பொதுமக்களின் கோரிக்கைகளை அவர்களின் இருப்பிடத்திலேயே நிவர்த்தி செய்ய "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாம் 24.072025, 25.07.2025, 29,07,2025 மற்றும் 30.07.2025 ஆகிய நாட்களில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. இதில் முகாமிற்கான பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டி அரசு துறை சார்ந்த பணிகள் என்பதினால் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று சீழ்க்கண்டவாறு உள்ளூர் விலைப்புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s. Nainika Enterprises, Chennai – 21 என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து நகர்மன்ற தீர்மானம் எண் 744 நாள் 31.07.2025 ரூ.10.00 லட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டது. கீழ்க்கண்ட வரப்பெற்ற நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி விவரங்கள்.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒரு நாள் முகாமிற்கான விலை |
|---|---|---|
| 1 | M/s. Nainika Enterprises, Chennai – 21 | ரூ. 189625/- |
| 2 | M/s Mathew Nagalingam Enterprises | ரூ. 213930/- |
| 3 | M/s Tiugazh Enterprises | ரூ. 201250/- |

இதில் மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Nainika Enterprises, Chennai - 21 என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி செலவின ரூ.515050/- செலவினம் மேற்கொள்ளப்பட்டது. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 864 /2025 / இ1)

நகர்மன்ற தீர்மான எண் 762 நாள் 29.08.2025

தீர்மானம் : உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு முகாம் 24.072025, 25.07.2025, 29,07,2025 மற்றும் 30.07.2025 அரசு துறை சார்ந்த பணிகள் என்பதினால் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/s. Nainika Enterprises, Chennai – 21 பணி உத்திரவு வழங்கப்பட்டது. செலவினம் ரூ.515050/- மேற்கொள்ளப்பட்டது. மன்றம் அனுமதி வழங்குகிது.

## பொருள் எண் 11

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 18.04.2025ம் தேதி பொன்னேரி நகராட்சிக்கு அருகில் உள்ள ஆண்டார்குப்பம், பகுதியில் நடைபெற்ற மாநாடுக்காக, மக்களுக்கு நல திட்டங்கள், மக்களிடைநேரடியாக மனுக்கள் பெற பொன்னேரி நகராட்சிக்கு சாலை வழியாக நடை பயணம் மேற்கொள்ளும் பொருட்டு அவ்வழியாக பள்ளங்கள், புல் செடிகள் அகற்றவும் மாநாடு

நடக்கவிருக்கும் நிலப்பகுதியை சமன் செய்ய JCB இயந்திரத்தை வாடகைக்கு எடுக்க குறைந்த விலைப்புள்ளி கொடுத்த திரு. B. ஜோதீஸ்வரன் என்பவருக்கு பணி உத்திரவு வழங்கியதற்கும் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் திருத்திய 2022 பிரிவு 57(7)ன் படி பணிகள் மேற்கொண்டதற்கும், மேற்படி செலவின தொகை ரூ 1,80,548 யை வழங்கியதை 57(7)ன் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் பதிவு செய்யலாம்.

   ( ந.க.எண். 365 /2025 / எச்1)

நகர்மன்ற தீர்மான எண் 763 நாள் 29.08.2025

தீர்மானம் : மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 18.04.2025ம் தேதி - நடை பயணம் மேற்கொள்ளும் பொருட்டு நிலப்பகுதியை சமன் செய்ய JCB இயந்திரத்தை வாடகைக்கு எடுக்க திரு. B. ஜோதீஸ்வரன் பணி உத்திரவு வழங்கி பணிகள் மேற்கொண்டதற்கும், செலவின தொகை ரூ1,80,548 யை வழங்கியதை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்கிறது.

## <u>பொருள் எண் 12</u>

பொன்னேரி நகராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றதில் வார்டு எண் 15ல் பார்த்தசாரதி கோயில் தெரு பாதாள சாக்கடை திட்டப்பணி நடைபெற்ற பிறகு சாலை செப்பனிடப்படவில்லை என பொதுமக்கள் மூலமாக சாலை வேண்டி மனு பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தெருவில் சிமெண்ட் சாலை ரூ. 3.30 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

<u>அலுவலக குறிப்பு</u>

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கு செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

   (ந.க. எ.ண் 416/2025/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 764 நாள் 29.08.2025

தீர்மானம் : வார்டு எண் 15ல் சிமெண்ட் சாலை ரூ. 3.30 இலட்சம் செலவினம் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது.

**மேசைப்பொருள் எண் 13**

பொன்னேரி நகராட்சி பொதுநிதி 2025-2026ன் கீழ், இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட அனைத்து வடிகால்வாய்கள் தூர்வாரும் பணிக்கு ரூ 5.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 22.08.2025 அன்று Online மூலம் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விலைவிகிதம் மன்றத்தின் பார்வைக்கு.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வடிகால்வாய்கள் தூர்வாரும் பணி | 5.00 | 1. திரு. B.ஜோதீஸ்வரன் | மதிப்பீட்டை விட 0.05% குறைவு |
| | | | 2.M/S ஸ்ரீ சாய் எண்டர்பிரைசஸ் | மதிப்பீட்டை விட 2.29% அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்ததில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு..

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. செலவினம் நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
   ( ந.க.எண். 864 /2025 / இ1)

நகர்மன்ற தீர்மான எண் 765 நாள் 29.08.2025

தீர்மானம் : தூர்வாரும் பணிக்கு ரூ 5.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு – செலவினம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கிறது.

**மேசைப்பொருள் எண் 14**

பொன்னேரி நகராட்சிக்கு சொந்தமாக 6000 லிட்டர் கொள்ள்ளவு கொண்ட கழிவுநீர் ஊர்தி தூய்மை இந்தியா திட்டம் (SBM 2.0) 2023 -24 ன் கீழ் புதியதாக வாங்கப்பட்டுள்ளது. இந்த வாகனத்தை இயக்க ஓட்டுநர் மற்றும் கழிவுநீர் அகற்ற பயிற்சி பெற்ற பணியாளர் ஒருவரையும் வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்தத்திற்கு பணி அமர்த்த ரூ 3.00 இலட்சம் மதிப்பீட்டீல் Online மூலமாக 20.08.2025 அன்று Tender நடைபெற்றதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விலை விகிதம் மன்றத்தின் பார்வைக்கு

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | கழிவுநீர் ஊர்தி வாகனத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஓட்டுநர் மற்றும் உதவியாளர் நியமனம் செய்தல் (ஆறு மாதம்) | 3.00 | M/S RMJ எண்டர்பிரைசஸ் | மதிப்பீட்டை விட 0.13% குறைவு |
| | | | M/S OS & Co | மதிப்பீட்டை விட 3.37% அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்ததில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு..

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண். 864 /2025 / இ1)

நகர்மன்ற தீர்மான எண் 766 நாள் 29.08.2025

தீர்மானம் : கழிவுநீர் ஊர்திக்கு ஓட்டுநர் மற்றும் பணியாளர் ஒருவரையும் வெளிக்கொணர்வு முறையில் ரூ 3.00 இலட்சம் மதிப்பீட்டில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு நகராட்சி நிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கிறது.

**மேசைப்பொருள் எண் 15**

பொன்னேரி நகராட்சியில் வார்டு எண் 22, எம்.ஜி.ஆர் நகரில் உள்ள ஆழ்துளை கிணறு மிகவும் பழுதடைந்து பயன்பாடற்ற நிலையில் உள்ளதால் அப்பகுதி பொதுமக்களின் குடிநீர் விநியோகத்தின் அவசியம் கருதி பொதுநிதியின்கீழ் வார்டு எண் 22 , சங்கர் மாருதி நகரில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் .

| வ.எண் | பணிகளின் பெயர்<br>பொதுநிதி 2024-25 | மதிப்பீட்டு தொகை<br>(ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 22, சங்கர் மாருதி நகரில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 3.00 |

**அலுவலக குறிப்பு**

நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண் 864/2024/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 767 நாள் 29.08.2025

தீர்மானம் : வார்டு எண் 22, எம்.ஜி.ஆர் நகரில் உள்ள ஆழ்துளை கிணறு மிகவும் பழுதடைந்துள்ளதால் பணியின் அவசியம் கருதி புதியதாக ஆழ்துளை கிணறு பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ3.00 இலட்சம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கிறது.

**மேசைப்பொருள் எண் 16**

பொன்னேரி நகராட்சியில் டெங்கு கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள 26.08.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டுள்ளது. மேலும் பொதுசுகாதார நலன் கருதியும், நிர்வாக நலன் கருதியும், ஏற்கனவே கொசு ஒழிப்பு பணி மேற்கொண்டு வரும் திருவாளர் தாட்சண்யா எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு பழைய விலை விகிதத்தில் பணி மேற்கொள்ள செப்டம்பர் 2025 மாதத்திற்கு மட்டும் பணி உத்திரவு நீடித்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

எதிர்வரும் காலம் மழைக்காலம் என்பதாலும், பொது சுகாதார பணி நலன் கருதியும் மன்றம் அனுமதி வழங்கலாம்

( ந.க.எண் 06 /2024 / எச்1)

நகர்மன்ற தீர்மான எண் 768 நாள் 29.08.2025

தீர்மானம் : கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள 26.08.2025 அன்று ஒப்பந்தபுள்ளி கோரியதில் தாட்சண்யா எண்டர்பிரைசஸ் பணி மேற்கொள்ள செப்டம்பர் 2025 மாதத்திற்கு மட்டும் பணி உத்திரவு நீடித்து வழங்க மன்றம் அனுமதி வழங்குகிறது.

**<u>மேசைப்பொருள் எண் 17</u>**

பொன்னேரி நகராட்சியில் வார்டு எண் 1, தர்மலிங்க முதலி தெருவில் உள்ள மழைநீர் கால்வாய்க்கு மேல் மூடி அமைக்க பொதுமக்களிடமிருந்தும், வார்டு உறுப்பினரிடமிருந்தும் கோரிக்கைகள் வரப்பெற்றதால் கீழ்க்காணும் விவரப்படியான பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் .

| வ.எண் | பணிகளின் பெயர்<br>பொதுநிதி 2024-25 | மதிப்பீட்டு தொகை<br>(ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் 1, தர்மலிங்க முதலி தெருவில் உள்ள மழைநீர் கால்வாய் மேல் மூடி அமைத்தல் பணி | 1.50 |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண் 864/2024/இ1)

நகர்மன்ற தீர்மான எண் 769 நாள் 29.08.2025

தீர்மானம் : வார்டு எண் 1, தர்மலிங்க முதலி தெருவில் உள்ள மழைநீர் கால்வாய்க்கு மேல் மூடி அமைக்க பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கிறது .

ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி
திருவள்ளூர் மாவட்டம்